முருகப்பெருமான் துணை

**மகான் இடங்கழி நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

13.04.2021, செவ்வாய்கிழமை

1. அருட்குருவே அரங்கா வாழ்க
ஆறுமுகனார் சூட்சுமமாக வந்த
அருட்பெருஞ் சுடரே தேசிகா வாழ்க
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சார்வரி சேல் திங்கள்
குறைவிலா முப்பானோர் திகதி குசன்வாரம்
(சார்வரி வருடம் பங்குனி மாதம் 31ம் நாள், 13.04.2021 செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் யோகபிரசன்ன ஆசி
தேசிகனுக்கு இடங்கழி நாயனார் யானும்
3. யானும் உலகநலம் பெற உரைப்பேன்
உயர்வென தீதான வழிதன்னை
ஞானமாகக் கருதி அலையும் மக்களே
நம்பிக்கை தந்து காத்தருளும்
4. அருளும் மகா ஞானி அரங்கன்
ஆறுமுகனார் மெய்ஞான வழியை
இருள் வெல்லும் சக்தியாக
ஏழாம்படைவீட்டில் சரவணச் சுடரேற்றி
5. சுடரேற்றி ஞானிகள் பூசையாக
சுத்தநெறிபட செய்து அழைக்க
தடைபடா தவராசனை நோக்கி
தரணியோர் தொடர்ந்து வந்து
6. வந்துமே உண்மை நெறி ஏற்று
வணங்கி அருளமுது உண்டு
சிந்தை வைத்து சிவதீட்சை ஏற்று
சித்திக்க வேண்டுமென வேண்டிவர
7. வருகவே தெளிவு திடம் கூடி
வரம் கிட்டும் ஞான பலம்கிட்டும்
முருகனே ஞானத்தலைவனென்றும்
முழுமைபெற்ற ஞானி அரங்கனே
8. அரங்கனே உண்மை குருவென்றும்
அறிவு தெளிவு கண்டு தேறி
வரங்கள்பட வாழ்வில் மாற்றம்
வந்தடையும் எல்லா வகையுமாக
9. ஆகவே பூரணத்துவம் எனும்
அழியாமை கூடி நின்று
மகான் அரங்கன் வழிவழியாக
மறுமை வென்று மரணமிலாப் பெருவாழ்வு

10. பெருவாழ்வு கண்டு தேறுவர்
பேருலகில் இந்த சரணடைவு
ஆறுமுக அரங்கன் வழி கூடிட
அகிலத்தில் அரங்கன் வேண்டிக் கேட்ட

11. கேட்ட வண்ணம் நவ கோடிமேலான
குறைவிலா ஞானியர் சக்தி பெருகி
கட்டமிலா ஞானலோகமாக மாறும்
கண்டுரைத்த யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—